செ.வெ.எண்-38 நாள்-17.12.2019

**அரியலூர் மாவட்டம்**

**உள்ளாட்சி தேர்தல் தொடர்பான அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கட்சி பிரதிநிதிகளுடன் ஆலோசனைக் கூட்டம் தேர்தல் பார்வையாளர் திரு.த.சு.ராஜசேகர், இஆப., அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.**

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் உள்ளாட்சி தேர்தல் 2019 அமலுக்குவந்துள்ளதையொட்டி, உள்ளாட்சி தேர்தல் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கட்சி பிரதிநிதிகளுடன் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தலைமையில், தேர்தல் பார்வையாளர் **திரு.த.சு.ராஜசேகர், இஆப.,** அவர்கள் முன்னிலையில்,இன்று (17.12.2019) நடைபெற்றது.

**இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது,**

பதிவு செய்யப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் அவர்களுக்கு உரிய சின்னங்கள் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். கட்சி அடிப்படையில் போட்டியிடும் வேட்பாளர்கள் வேட்பு மனுவினை திரும்ப பெறும் நாளான 19.12.2019 பிற்பகல் 03.00 மணிக்குள் சம்மந்தப்பட்ட உதவி தேர்தல் நடத்தும் அலுலவர், தேர்தல் நடத்தும் அலுவலரிடம் படிவம் ஏ, படிவம் பி சமர்ப்பிக்க வேண்டும். பதிவு செய்யப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்படாத கட்சிகளுக்கு சுயேட்சை சின்னங்களிலிருந்து (Free Symbols) முன்னுரிமைய அடிப்படையில் சின்னங்கள் ஒதுக்கீடு செய்யப்படும். அதன் பிறகு சுயேட்சை வேட்பாளர்களுக்கு சுயேட்சை சின்னங்களிலிருந்து சின்னங்கள் ஒதுக்கீடு செய்யப்படும். ஒரே சுயேட்சை சின்னததை ஒன்றுக்கு மேற்பட்ட வேட்பாளர்கள் கோருகின்ற நேரத்தில் யாருக்கு சின்னம் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று குழுக்கள் முறையில் முடிவு செய்யப்படும்.

வேட்பாளர்கள் தங்களுக்கு ஒரு தேர்தல் முகவரை நியமித்து கொள்ளலாம். ஏற்கனவே உரிய படிவத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர், வட்டார வளர்ச்சி அலுவலருக்கு விண்ணப்பிக்க வேண்டும். தேர்தல் நடத்தும் அலுவலர், வட்டார வளர்ச்சி அலுவலர் 2 நகல்களில் ஒன்றை கையொப்பமிட்டு திரும்ப அளிப்பார். தேர்தல் முகவர் இந்த ஒப்பமிட்ட நகலை எப்போதும் தன் வசம் வைத்திருக்க வேண்டும்.

ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் வேட்பாளர்கள் ஒரு வாக்குச்சாவடி முகவரை நியமித்து கொள்ளலாம். இதற்காக உரிய படிவத்தை பூர்த்தி செய்து தேர்தல் நடத்தும் அலுவலர், வட்டார வளர்ச்சி அலுவலருக்கு அனுப்பி அவரது அனுமதி பெற்று ஒரு முகவரை நியமித்துக்கொள்ளலாம். எனினும் ஒரு வாக்குச்சாவடியில் ஒரு முகவர் மட்டுமே ஒரு நேரத்தில் இருக்க முடியும்.

மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் மற்றும் ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள் தேர்தலை பொறுத்தமட்டில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளால் நிறுத்தப்படும் வேட்பாளர்கள் வாக்குப்பெட்டிகள் திறப்பது மற்றும் தொடக்கநிலை வாக்கு எண்ணிக்கை ஆகியவற்றை பார்பதற்கு தொடர்புடைய வகை பிரிப்பு மேசைகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு வாக்கு எண்ணிக்கை முகவர் நியமித்துக்கொள்ளலாம். வாக்கு எண்ணிக்கை அறையில் ஒவ்வொரு வாக்கு எண்ணிக்கை மேசையிலும் ஒரு வாக்கு எண்ணிக்கை முகவர் நியமித்துக்கொள்ளலாம். மேலும், தேர்தல் நடத்தும் அலுவலர், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் மேசையிலுள்ள பணிகளை கவனிப்பதற்கு கூடுதல் வாக்கு எண்ணிக்கை முகவர் ஒருவரை நியமித்துக்கொள்ளலாம்.

வாக்காளர்களுக்கு பரிசுப்பொருட்களோ, உறுதிமொழியோ அல்லது அச்சுறுத்தலோ இன்றி வாக்கு சேகரிப்பு பணிகளை செய்ய வேண்டும். வாக்காளர்களின் மத, இன, சாதி மற்றும் மொழி உணர்வுகளை தூண்டி வாக்களிப்பு செய்யவோ அல்லது வாக்களிப்பதை தடுக்கவோ முயலக்கூடாது. வாக்களிப்பு முடிவதற்கு 48 மணி நேரத்திற்கு முன்பாக தேர்தல் கூடங்கள் எதையும் நடத்தவோ அல்லது அதற்கான ஏற்பாட்டை செய்யவோ கூடாது. வாக்குச்சாவடியின் சுவர்களிலோ அல்லது 100 மீட்டர் சுற்றுப்பகுதியிலோ எந்த விதமான தேர்தல் விளம்பரங்களும் செய்தல் கூடாது. வாக்குப்பதிவு நாளன்று வாக்குச்சாவடி பகுதியிலிருந்து 100 மீட்டர் தொலைவிற்குள் வாக்குச்சேகரிப்பது தடை செய்யப்பட்டுள்ளது. மேலும், வாக்குச்சாவடியிலிருந்து 200 மீட்டர் தொலைவிற்குள் தேர்தல் அலுவலகங்கள் அமைக்கக்கூடாது. மேலும், அரியலூர் மாவட்டத்தில் 101 வாக்குச்சவாடிகள் பதற்றமான வாக்குச்சாவடிகள் என கண்டறியப்பட்டு அவற்றிற்கு தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, இத்தேர்தலினை அமைதியாகவும், நியாயமாகவும் நடப்பதற்கு உதவி புரிய வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வீ.ஆர்.சீனிவாசன், மாவட்ட வருவாய் அலுவலர் கா.பொற்கொடி, திட்ட இயக்குநர் (ஊரகவளர்ச்சிமுகமை) சு.சுந்தர்ராஜன், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) ஜெயராமன், உதவி காவல் கண்காணிப்பாளர் பெரியய்யா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் ரகு (உள்ளாட்சி தேர்தல்), இரவிச்சந்திரன் (பொது) மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள், அலுவலர்கள், காவல்துறையினர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**